ஸ்ரீ

திருவேங்கடத்தந்தாதி

மூலபாடம்.

அழகியமணவாளதாசர்

என்கிறதிவ்யகவி

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

கட்டளைக்கலித்துறையினல் அருளிச்செய்தது.

௩-ம் பதிப்பு.

இஃது

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1888.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

திருவேங்கடத்தந்தாதி.

தனியன்.

இக்கனாயந்திரத்துட்பட்டதென்னவிருவினையுள்
புக்கனாமாறொடியுந்தரியாதுழல்புன்பிறப்பாம்
எக்கனாநீக்கிப்படித்தானாயந்தவிருவிரசைக்
கக்கனாசேர்க்குமணவாளதாசனருங்கவியே.

காப்பு.

நல்லவந்தாதிதிருவேங்கடவர்க்குநான்விளம்பச்
சொல்லவந்தாதின்வழுபொருட்சோர்வறச்சொல்வித்தருள்
பல்லவந்தாதிசைவண்டார்குருகைப்பரசமயம்
வெல்லவந்தாதிமறைதமிழாற்செய்தவித்தகனே.

நூல்.

திருவேங்கடத்துநிலைபெற்றுநின்றனசிற்றன்னையால்
தருவேங்கடத்துத்தனாமேனடந்தனதாழ்பிறப்பின்
உருவேங்கடத்துக்குளத்தேயிருந்தனவுற்றழைக்க
வருவேங்கடத்தும்பியஞ்சலென்றோடினமால்கழலே. (க)

மாலைமதிக்குஞ்சியீசனும்போதனும்வாசவனும்
நாலைமதிக்குமுனிவருந்தேவருநோக்கியந்தி
காலைமதிக்குள்வைத்தேத்துந்திருமலைகைம்மலையால்
வேலைமதிக்கும்பெருமானுறைதிருவேங்கடமே. (உ)

வேங்கடமாலையவியாமதிவிளக்கேற்றியங்கம்
ஆங்கடமாலையமாக்கிவைத்தோமவன்சேவடிக்கே
தீங்கடமாலைக்கவிபுனைந்தோமிதிற்சீரியதே
யாங்கடமாலையிராவதமேறியிருக்குமதே. (௩)

இருக்காரணஞ்சொல்லுமெய்ப்பொருளின்பமுமெய்ப்பொருட்கும்
கருக்காரணமுநற்றாயுநற்றந்தையுங்கஞ்சச்செல்வப்
பெருக்காரணங்கின்றலைவனுமாதிப்பெருந்தெய்வமும்
மருக்காரணவும்பொழில்வடவேங்கடமாயவனே. (௪)

மாயவன்கண்ணன்மணிவண்ணன்கேசவன்மண்ணும்விண்ணும்
தாயவன்கண்ணன்கமலமொப்பான்சரத்தாலிலங்கைத்
தீயவன்கண்ணஞ்சிரமறுத்தான்திருவேங்கடத்துத்
தூயவன்கண்ணன்புடையார்க்குவைகுந்தந்தூரமன்றே. (௫)

தூரவிரும்புண்டரிக்குமிக்காயத்தைச்சூழ்பிணிகாள்
சேரவிரும்புண்டரார்க்கருள்வானெடுவேங்கடத்தான்
ஈரவிரும்புண்டரீகப்பொற்பாதங்களென்னுயிரைத்
தீரவிரும்புண்டரீராக்குமாறுள்ளஞ்சேர்ந்தனவே. (௬)

சேர்ந்துகவிக்கும்முடிகவித்தாய்சிறியேனிதயம்
சார்ந்துகவிக்கும்வரமளித்தாய்கொண்டறண்டலைமேல்
ஊர்ந்துகவிக்கும்வடமலையாய்டஞ்சொழுக்கியபால்
வார்ந்துகவிக்கும்பொழுதிலஞ்சேலென்றுவந்தருளே. (௭)

வந்திக்கவந்தனைகொள்ளென்றுகந்தனுமாதவரும்
சிந்திக்கவந்தனைவேங்கடநாதபல்சீவன்றின்னும்
உந்திக்கவந்தனைச்செற்றாயுனக்குரித்தாயபின்னும்
புந்திக்கவந்தனைச்செய்தைவர்வேட்கைபொருமென்னையே. ()

பொருதரங்கத்தும்வடத்துமனந்தபுரத்துமன்பர்
கருதரங்கத்துந்துயில்வேங்கடவகண்பார்த்தருளாய்
நிருதரங்கத்தசிறம்போல்வருமந்திநேரத்தன்றில்
ஒருதரங்கத்தும்பொழுதும்பொருளென்னொருவல்லியே. (௯)

ஒருமாதவனியொருமாதுசெல்வியுடனுறைய
வருமாதவனின்மகுடம்வில்வீசவடமலைமேல்
கருமாதவன்கண்ணனின்பாற்றிருநெடுங்கண்வளர்கைக்
கருமாதவமென்னசெய்தாய்பணியெனக்கம்புதியே. (க0)

அம்பரந்தாமரைபூத்தலர்ந்தன்னவவயவரை
அம்பரந்தாமரையஞ்சனவெற்பரையாடகமாம்
அம்பரந்தாமரைசூழ்ந்தாரைவாழ்த்திலரைம்புலனும்
அம்பரந்தாமரைபோற்றிரிவாரையகனெஞ்சமே. (கக)

நெஞ்சுகந்தத்தையுமக்குரைத்தேனிற்றைநீடிரவொன்
றஞ்சுகந்தத்தைவிளைக்குமென்னுசையதாமிதழ்சொல்
கிஞ்சுகந்தத்தையனையீரிங்கென்னைக்கெடாதுவிடும்
விஞ்சுகந்தத்தைவிளைக்குந்துழாயண்ணல்வேங்கடத்தே. (கஉ)

வேங்கடத்தாரையுமீடேற்றநின்றருள்வித்தகரைத்
தீங்கடத்தாரைப்புனைந்தேத்திலீர்சிறியீர்பிறவி
தாங்கடத்தாரைக்கடத்துமென்றேத்துதிர்தாழ்கயத்துள்
ஆங்கடத்தாரைவிலங்குமன்றோசொல்லிற்றையமற்றே. (கங)

ஐயாதுவந்தனைநாயேனையஞ்சனவெற்பவென்றும்
கையாதுவந்தனைநின்னையல்லாற்கண்ணுதன்முதலோர்
பொய்யாதுவந்தனையார்முகங்காட்டினும்போற்றியுரை
செய்யாதுவந்தனைபண்ணுதுவாக்குமென்சென்னியுமே. (கச)

சென்னியிலங்கைகுவிக்குமுயிர்க்குந்திகைக்குநின்னை
உன்னியிலங்கையிற்கண்ணுறங்காதுயர்வீடணனை
மன்னியிலங்கையில்வாழ்கென்றவேங்கடவாணமற்றோர்
கன்னியிலங்கைக்கினின்பேர்கருணைக்கடலல்லவே. (கரு)

கடமாமலையின்மருப்பொசித்தாய்க்குக்கவிநடத்தத்
தடமாமலைவற்றவாளிதொட்டாய்க்கென்றனிநெஞ்சமே
வடமாமலையுந்திருப்பாற்கடலும்வைகுந்தமும்போல்
இடமாமலைவற்றுநின்றுங்கிடந்துமிருப்பதற்கே. (கசா)

இருப்பதனந்தனிலெண்ணலில்வைகுந்தத்தென்பர்வெள்ளிப்
பருப்பதனந்தன்மலரோனறிகிலர்பாரளந்த
திருப்பதனந்தன்மதலைசிற்குந்திருவேங்கடமென்
பொருப்பதனந்தறவிர்ந்துயிர்காடொழப்போதுமினே. (கஎ)

போதாரவிந்தவனையும்புகாவண்டபுற்புதத்தின்
மீதாரவிந்தவினைதீர்க்கவேண்டும்விண்மண்ணுக்கெல்லாம்
ஆதாரவிந்தளந்தேன்பாடும்வேங்கடத்தப்பனின்பொற்
பாதாரவிந்தமல்லாலடியேற்கொருபற்றில்லையே. (கஅ)

பற்றியிராமற்கலைபோய்வெளுத்துடல்பாதியிரா
வற்றியிராப்பகனின்கண்பனிமல்கிமாசடைந்து
நிற்றியிராகமொழிச்சியைப்போனெடுவேங்கடத்துள்
வெற்றியிராமனைவேட்டாய்கொனியுஞ்சொல்வெண்மதியே. ()

மதியாதவன்கதிர்மின்மினிபோலொளிர்வைகுந்தா
மதியாதவன்றரவாழ்ந்திருப்பீர்வடவேங்கடவன்
மதியாதவன்கடத்துட்டயிர்வாய்வைத்தமாயப்பிரான்
மதியாதவனுரக்கின்டான்கழல்சென்னிவைத்திருமே. (உ0)

இருபதுமந்தரத்தோளுமிலங்கைக்கிறைவன்சென்னி
ஒருபதுமந்தரத்தேபறுத்தோனப்பனுந்திமுன்னுள்
தருபதுமந்தரவந்தனநான்முகன்றன்முதலா
வருபதுமந்தரமொத்தபல்சீவனும்வையமுமே. (உக)

வையமடங்கலுமோர்துகள்வாரியொருதிவலை
செய்யமடங்கல்சிறுபொறிமாருதஞ்சிற்றுயிர்ப்பு
துய்யமடங்கலிலாகாயந்தான்விரற்றேன்றும்வெளி
வெய்யமடங்கல்வடிவானவேங்கடவேதியர்க்கே. (உஉ)

வேதாவடமலைவெங்காலன்கையில்விடுவித்தென்னை
மாதாவடமலைகொங்கையுண்ணுதருண்மன்னளந்த
பாதாவடமலைமேற்றுயின்றாய்கடற்பார்மகட்கு
நாதாவடமலையாயலர்மேன்மங்கைநாயகனே. (உங)

நாயகராத்திரியுஞ்சிலதேவர்க்குநாணிலகொல்
தூயகராத்திரிமூலமெனாமுணர்ந்துதிப்பணிப்
பாயகராத்திரிமேனியம்மான்பைம்பொன்வேங்கடவன்
தீயகராத்திரிசக்கரத்தாற்கொன்றசீர்கண்டுமே. (உச)

கண்டவனந்தரங்காவெலிநீர்வையங்காத்தவைமீண்
டுண்டவனந்தரங்கத்துறைவானுயர்தந்தைதமர்
விண்டவனந்தரமேலவன்வேங்கடமாலடிமை
கொண்டவனந்தரத்தும்பேர்நினைக்கவுங்கூற்றஞ்சுமே. (உரு)

அஞ்சக்கரவடமூலத்தன்போதனறிவரிய
செஞ்சக்கரவடவேங்கடநாதனைத்தேசத்துள்ளீர்
நெஞ்சக்கரவடநீக்கியின்றேதொழுநீண்மறலி
துஞ்சக்கரவடம்வீசுமக்காலந்தொழற்கரிதே. (உசு)

தொழும்பாலமரர்தொழும்வேங்கடவன்சுடர்நயனக்
கொழும்பாலனையொருகூறுடையானர்தகோபனில்லத்
தழும்பாலனாகியகாலத்துட்பேய்ச்சியருந்துநஞ்சைச்
செழும்பாலமுதென்றுவந்தாற்கென்பாடல்சிறக்குமன்றே. ()

சிறக்கும்பதந்தருவார்திருவேங்கடச்செல்வர்செய்ய
நிறக்கும்பதந்தொழுதுய்யவென்னீர்நெறியிற்பிழைத்து
மறக்கும்பதந்தியுஞ்சேனுமசுணமும்வண்டினமும்
பறக்கும்பதங்கமும்போலவராற்கெடும்பாதகரோ. (உஅ)

பாதமராவுறைபாதாளத்தூடெகிரண்டத்துப்
போதமராயிரம்பொன்முடியோங்கப்பொலிந்துநின்றாய்
நீதமரானவர்க்கெவ்வாறுவேங்கடநின்றருளும்
நாதமராமரமெய்தாய்முன்கோவனடந்ததுவே. (உகூ)

நடைக்கலங்காரமடவார்விழிக்குநகைக்குச்செவ்வாய்க்
கிடைக்கலங்காரமுலைக்கிச்சையானவிவனென்றெண்ணிப்
படைக்கலங்காணத்துரந்தேநமன்றமர்பற்றுமன்றைக்
கடைக்கலங்காணப்பனேயலர்மேன்மங்கையங்கத்தனே. (௩0)

அங்கமலக்கும்வினையாலலமரவோவுனக்கும்
அங்கமலக்குமடிமைப்பட்டேனரவானபரி
அங்கமலக்குடையாயக்கராவுடனன்றமர்செய்
அங்கமலக்குமுன்னின்றருள்வேங்கடத்தற்புதனே. (நக)

அற்பரதத்துமடவார்கலவியுமாங்கவர்கள்
நற்பரதத்தாடிப்பதும்பாடலுநச்சிநிற்பார்
நிற்பரதத்துக்கதிர்தோயும்வேங்கடநின்றருளும்
சிற்பரதத்துவன்றாளடைந்தேன்முத்திசித்திக்கவே. (நஉ)

சித்திக்குவித்ததவோவிதுவோவென்றுதேடிப்பொய்ந்நூல்
கத்திக்குவித்தபல்புத்தகத்தீர்கட்டுணாக்கவம்மின்
அத்திக்குவித்தனையும்முண்டவேங்கடத்தச்சுதனே
முத்திக்குவித்தகனென்றேசுருதிமுறையிடுமே. (நங)

முறையிடத்தேசமிலங்கைசெற்றான்முதுவேங்கடத்துள்
இறையிடத்தேசங்குடையானினியென்னையாண்டிலனேல்
தறையிடத்தேயுழலெல்லாப்பிறவிதமக்குமள்
வுறையிடத்தேய்ந்திடுமிவ்வந்திவானத்துடுக்குலமே. (நச)

உடுக்குமுடைக்குமுணவுக்குமேயுழல்வீரினிநீர்
எடுக்குமுடைக்குரம்பைக்கென்செய்வீரிழிமும்மதமும்
மிடுக்குமுடைக்குஞ்சரந்தொட்டவேங்கடவெற்பரண்ட
அடுக்குமுடைக்குமவரடிகாண்மினனைவருமே. (நரு)

வருமஞ்சனவனொருவனையேயுன்னிவாழ்த்துர்தொண்டர்
கருமஞ்சனனங்களைத்துய்யவேண்டில்கருதிற்றெல்லாம்
தருமஞ்சனவெற்பன்றாட்டாமரையைச்சதுமுகத்தோன்
திருமஞ்சனஞ்செய்புனல்காணுமீசன்சிரம்வைத்ததே. (நசு)

சிரந்தடிவானிவனேயென்றயன்வெய்யதியசொல்லக்
கரந்தடிவான்றலைகவ்வப்பித்தேறலிற்கண்ணுதலோன்
இரந்தடிவீழத்துயர்தீர்த்தவேங்கடத்தெந்தைகண்டீர்
புரந்தடியேனைத்தன்பொன்னடிக்கீழ்வைக்கும்புண்ணியனே.()

புண்ணியங்காமம்பொருள்வீடுபூதலத்தோர்க்களிப்பான்
எண்ணியங்காமன்றிருத்தாதைநிற்குமிடமென்பரால்
நண்ணியங்காமன்பனைக்கலங்காத்திருநாட்டிருத்தி
மண்ணியங்காமற்பிறப்பறுத்தாளும்வடமலையே. (௩௮)

வடமலையப்பன்னகஞ்சேர்ந்தவனிடைமங்கைகொங்கை
வடமலையப்பன்னரும்போகந்துய்த்தவன்மாயன்கண்ணன்
வடமலையப்பன்னருள்போற்றியைவர்மயக்குகர
வடமலையப்பன்னிருநாமநாவின்மலக்குவனே. (௩௯)

மலங்கத்தனத்தையுழன்றீட்டிமங்கையர்மார்பில்வடம்
அலங்கத்தனத்தையணையகிற்பீரப்பன்வேங்கடத்துள்
இலங்கத்தனத்தைமகன்றேரினின்றெதிரேற்றமன்னர்
கலங்கத்தனத்தைக்குறித்தானைமேவக்கருதுமினே. (௪0)

கருத்தாதரிக்குமடியேனைத்தள்ளக்கருதிக்கொலோ
திருத்தாதரிக்குமைவர்க்கிளையாக்கினைசெண்பகத்தின்
மருத்தாதரிக்குமருவியருவடவேங்கடத்துள்
ஒருத்தாதரிக்கும்படியெங்ஙனேயினியுன்னைவிட்டே. (௪௧)

உன்னைக்கரியமிடற்றனயன்முதலும்பரெல்லாம்
பொன்னைக்கரியொத்தபோதுமொவ்வார்புகழ்க்கோசலையாம்
அன்னைக்கரியமுத்தேயப்பனேயுன்னையன்றிப்பின்னை
முன்னைக்கரியளித்தாய்க்குவமானமொழியில்லையே. (௪௨)

இல்லைக்கண்டீரின்பந்துன்பங்கண்டீர்கண்டவேந்திழையார்
சொல்லைக்கண்டாரமுதென்னுந்தொண்டீர்தொல்லசுரனிறம்
கல்லைக்கண்டாவத்தைத்திருவேங்கடக்காவலனை
மல்லைக்கண்டீர்தரத்தேய்த்தானைவாழ்த்துமின்வாழுகைக்கே ()

கைத்தனுமோடிசைவெற்பெனக்காணவெவ்வாணனென்னும்
மத்தனுமோடிகல்செய்வெனென்றேவந்துவையுறுவேல்
அத்தனுமோடியுமங்கியுமோடவென்னப்பனுக்குப்
பித்தனுமோடினனங்கத்துத்தானென்றும்பெண்ணனென்றே()

பெண்ணுக்குவிக்கச்சிலைமேலொருதுகள்பெய்தபொற்ருள்
அண்ணுக்குவிக்கலெழும்போதெனக்கருள்வாய்பழிப்பு
நண்ணுக்குவிக்கச்சிளமுலைப்பூமகணுயகனே
எண்ணுக்குவிக்கக்குழலூதும்வேங்கடத்தென்கண்ணனே. ( )

கண்ணனை யெனெஞ் சுருகே னவைகொண்டேன் கண்ணு நெஞ்சம், புண்ணனை யேன்கல் லனையெனென் ருலும்பொற் பூங்கமலத், தண்ணனை யேநல்ல சார்வாக வேங்கடஞ் சார்ந்து மணி, வண்ணனை யயடைந் தேற்கில்லை யோதொல்லை வைகுந்தமே. (சசு)

வைகுந்தமாயவிழிமாதர்வேட்கையைமாற்றியென்னை
வைகுந்தமாயவினைநீக்கியமுத்தர்மாட்டிருத்தி
வைகுந்தமாயவொசித்தாய்வடதிருவேங்கடவா
வைகுந்தமாயவனேமாசிலாதவெண்மாமணியே. (சஎ)

மணியாழி வண்ண னுகந்தானைத் தன்வடி வாக்குமென்றே, துணியா ழியமறை சொல்லுந்தொன் மரது தோன்றக்கண் டோம், பணியாழின் மென்மொழி மாலாகிப் பள்ளிகொள் ளா மற்சங்கோ, டணியாழி நீங்கிநின்ருள் வேங்க டேசனை யாத ரித்தே. (சஅ)

ஆதரிக்கப்பட்டவாறுதன்மங்கையரங்கைமலர்
மீதரிக்கப்பட்டநின்னடியேவெள்ளருவிச்செம்பொன்
போதரிக்கப்பட்டஞ்சூழ்வேங்கடவெற்பபோரரக்கர்
நிதரிக்கப்பட்டகானகத்துடன்றுசென்றதுவே. (சகூ)

சென்றவனத்தத்தைமைந்தனாவாழ்வித்துத்தியமன்னர்
பொன்றவனத்தத்தைச்செய்தபிரான்புகழ்வேங்கடத்துள்
நின்றவனத்தத்தையாயுதன்பாதத்தென்னேசமெல்லாம்
ஒன்றவனத்தத்தைகாணாயிரறமுண்டுமெக்கே. (ரு0)

உண்டமருந்தைக்கும்மன்னையீர்மதனைந்தம்பும்
கொண்டமருந்தைக்குங்குறுகாமுனங்கொவ்வைச்செவ்வாய்

அண்டமருந்துகைக்குந்திறந்தானப்பன்போற்பரியும்
எண்டமருந்துகைக்கும்பொடிகாப்பிடுமின்றெனக்கே. (ருக)

எனக்குப்பணியப்பணியொருகாலிருகாலுநல்க
உனக்குப்பணியிங்கிருவோம்பணியிலென்னோர்பணியும்
நினக்குப்பணிவித்துக்கொண்டுன்பணிநீபணித்திலையென்
தனக்குப்பணிவெற்பின்மீதோங்கிநின்றதனிச்சுடரோ. (ருஉ)

தனித்தொண்டை மானிலத்தேபுரி வார்க்கரு டாளுடையாய், தொனித்தொண்டை மானடு வாய்பிளந் தாய்துங்க வேங்கட வா, முனித்தொண்டை மான்கையிற் சங்காழி நல்கியென் மூரற் செவ்வாய்க், கனித்தொண்டை மான்கையிற் சங்காழி கோடல் கருமமன்றே. (ருங)

கருமாதவாவிருந்தாவனசெய்தென்கருத்திருளைப்
பொருமாதவாவிருந்தாவனத்தாய்பொற்சவரியென்னும்
ஒருமாதவாவிருந்தாவனக்காவுயர்வேங்கடத்தெம்
பெருமாதவாவிருந்தாவனலேயும்பிறைக்கொழுந்தே. (ருச)

பிறைமாலையாலொருபேதைநைந்தாளந்தப்பேதைக்குநின்
றறைமாலைதாவென்றுமானிடம்பாடியநாவலர்காள்
நிறைமாலையற்றுக்கவிமாலையானினையீர்திருவெள்
ளறைமாலைவேங்கடத்தேயுறைமாலையரங்கனையே. (ருரு)

அரங்கங்குடந்தைகுருகூர்குறுங்குடியட்டபுய
கரங்கண்ணமங்கைநறையூர்கடன்மல்லைகச்சிகண்ண
புரங்கண்டியூர்தஞ்சைமாலிருஞ்சோலைபுல்லாணிமெய்யம்
தரங்கம்பரமபதம்வேங்கடேசற்குத்தானங்களே. (ருசு)

தானவனுகமருப்பொசித்தானுக்குத்தானுகர்த
தானவனுகமுடியினின்றானுக்குத்தாள்வணங்காத்
தானவனுகமிடந்தானுக்காளென்றுதன்னையெண்ணாத்
தானவனுகநினைந்திருப்பாற்கென்றுந்தானவனே. (ருஎ)

தானவராகத்தடிவார்வடமலைத்தண்ணந்துழாய்
ஞானவராகர்தருமண்டம்யாவையுநண்ணியவர்
கானவராகவிரறேறமத்திக்கனியின்வைகும்
வானவராகவிருப்பாரவற்றுண்மசகங்களே. (ருஅ)

மசகந்தரமென்னலாய்நிலையாவுடல்வாழ்வினை
அசகந்தரவல்லதோவன்னைமீரண்டமுண்டுமிழ்வா
ரிசகந்தரவண்ணர்வேங்கடவாணரிலங்கையர்கோன்
தசகந்தரமறுத்தார்திருப்பேர்சொல்லுந்திங்கறவே. (ருகூ)

திங்கடமாலத்திமுன்னின்றுகாலிப்பின்சென்றகொண்டல்
வேங்கடமால்கழலேவிரும்பார்விலைமாதர்மலம்
ஆங்கடமால்செயமாலாயவரொச்சிலாகச்சித்
தாங்கடமாலழிவாரிருந்தாலுஞ்சவப்பண்டமே. (௬0)

பண்டையிருக்குமறியாப்பரமபதத்தடியார்
அண்டையிருக்கும்படிவைக்குமப்பனையண்டத்துக்கும்
தண்டையிருக்குமலர்ந்தசெவ்வாயனைத்தாள்வணங்கா
மண்டையிருக்கும்விடுமோசனனமரணமுமே. (௬க)

மரணங்கடக்குஞ்சரநீங்கவாழ்வித்துவல்லரக்கர்
முரணங்கடக்குஞ்சரவேங்கடவகன்மூடியந்தக்
கரணங்கடக்குஞ்சரமத்தநீதருகைக்கெனக்குன்
சரணங்கடக்குஞ்சரன்வேறிலைதந்துதாங்கிக்கொள்ளே. (௬உ)

தாங்கடலாழிவளைதண்டுவாள்வில்லேற்றுனவனா
ஈங்கடவிசிக்குறித்தடித்துத்துணித்தெய்துவெல்லும்
பூங்கடல்வண்ணனிலைகிடைவந்ததுடோக்கிருப்பு
வேங்கடம்வேலையயோத்திவெங்கானகம்விண்ணுலகே. (௬௩)

உலகந்தரவுந்திபூத்திலையேற்சுடரோரிரண்டும்
இலகந்தரமும்புவியுமெங்கேயயனீசனெங்கே
பலகந்தரமுமுணவுமெங்கேபல்லுயிர்களெங்கே
திலகந்தரணிக்கெனநின்றவேங்கடச்சீதரனே. (௬௪)

சிவார்கழலையிரண்டையுஞ்செப்பென்றுதீங்குளவி
ழுவார்கழலைப்பயில்செங்கையார்நலம்பேணுமைவர்
ஆவார்கழலையிரண்டாமவத்தையினன்றெனக்குன்
பூவார்கழலையருளப்பனேயண்டபூரணனே. (சுரு)

பூரணனாரணன்பொன்னுலகாளிபுராரிசொடி
வாரணனாரணன்வாழ்த்தும்பிரான்வடவேங்கடத்துக்
காரணனாரணங்காணுவிறைவிகணவன்மன்னேழ்
பாரணனாரணனென்பார்க்குநீங்கும்பழுதவமே. (சுசு)

பழுத்தெட்டிபோன்றநடுச்செல்வர்பின்சென்றுபல்செருக்காய்
கொழுத்தெட்டினையளவெண்ணமற்றீர்குவடேறிமந்தி
கழுத்தெட்டியண்டர்பதிநோக்கும்வேங்கடக்காவலனை
எழுத்தெட்டினாலெண்ணியேத்திர்பரகதியேறுதற்கே. (சுஎ)

ஏறுகடாவுவரன்னங்கடாவுவரீரிருகோட்
டேறுகடாமழையோங்கல்கடாவுவரோடருவி
ஆறுகடாதவமுதெனப்பாயவரிகமுகம்
தாறுகடாவும்வடவேங்கடவனைத்தாழ்ந்தவரே. (சுஅ)

தாழ்ந்தவருக்கர்தருவொக்குமோபலதாரகையும்
சூழ்ந்தவருக்கன்சுடரொக்குமோதொல்லரக்கரொன்று
வாழ்ந்தவருக்கங்களைந்தான்வடமலைமாலடிக்கீழ்
வீழ்ந்தவருக்கன்பருக்கொப்பரோவண்டர்மெய்த்தவரே. (சுக)

மெய்த்தவம்போருகவெஞ்சொலிராமன்வில்வாங்கிவளைத்
துய்த்தவம்போருகாலுஞ்செய்தோருயர்வேங்கடத்து
வைத்தவம்போருகப்பூவார்கழலைமறைமனுநூல்
பொய்த்தவம்போருகவார்காமம்வேட்டுப்புரளுவரோ. (எ0)

புரண்டுதிக்கும்முடற்கேயிதஞ்செய்பொருளாக்கையினல்
இரண்டுதிக்குந்தடுமாறுநெஞ்சேயினியெய்துவம்வா
திரண்டுதிக்கும்மரன்வேளயனார்முதற்றேவரெல்லாம்
சரண்டுதிக்கும்படிமேனின்றவேங்கடத்தாமத்தையே. (எக)

தாமத்தனைவெண்ணெயுண்டவர்நாளிடைத்தாயர்பிணி
தாமத்தனையுவந்தார்வேங்கடாதிபர்தாமனைப்பூந்
தாமத்தனைமணியோடணிமார்பினர்தண்ணந்துழாய்த்
தாமத்தனைவதென்றோமடவீரொன்றடமுலையே. (எஉ)

நடவிகடத்தலைவேழமுன்னின்றனசாடுதைத்துப்
புடவிகடத்தலையீரேழளந்தனபூந்திருவோ
டடவிகடத்தலைவெட்டனவேங்கடத்தப்பன்புள்ளைக்
கடவிகடத்தலைநெய்யுண்டமாதவன்காண்மலரே. (எங)

கானகமுண்டநிற்போமென்னினீங்கிக்கடும்பிணிகாள்
தேனகமுண்டகத்தாள்வேங்கடேசனைச்சென்றிரக்கும்
போனகமுண்டவெண்ணிற்றானயனொடும்பூமியொடும்
வானகமுண்டபெருமானையின்றென்மனமுண்டதே. (எச)

மனந்தலைவாக்குறவெண்ணிவணங்கிவழுத்துந்தொண்டர்
இனந்தலைப்பெய்தனனிதன்றியேயிமையோருமெங்கள்
தனந்தலைவாவெனும்வேங்கடவாணதடங்கடலுள்
கனந்தலைநாகணையாயடியேனன்புஞானமுமே. (எரு)

ஞானக்கண்டாகனவொக்கும்பவந்துடைநஞ்சிருக்கும்
தானக்கண்டாகனச்சோதியென்றேத்துவன்றாலமுடன்
வானக்கண்டாகனவன்னவென்றேதொலிவந்தடையா
ஈனக்கண்டாகனற்கீந்தான்பரகதியென்னப்பனே. (எசு)

என்னப்பனுகத்துப்பொன்னாலன்வேங்கடத்தெந்தைதுயில்
மன்னப்பனுகத்துக்கஞ்சலென்றான்பன்மணிசிதறி
மின்னப்பனுகத்துப்பாய்ந்தான்கதையன்றிவெவ்வினைகள்
துன்னப்பனுகத்துப்பொய்ந்நூல்புகாவென்றுளைச்செவிக்கே.

செவித்தலைவன்னியிற்சுடேண்டவேயிசைதீப்பதும்யான்
தவித்தலைவன்மயலுந்தமர்காப்புந்தமிழ்க்கலியன்
கவித்தலைவன்றிருவேங்கடத்தான்முன்கழறுமின்பொன்
குவித்தலைவந்தகோனேரிவாழுங்குருகினமே. (எஅ)

குருகூரரங்கமறைத்தமிழ்மாலைகுலாவுந்தெய்வ
முருகூரரங்கர்வடவேங்கடவர்முன்னாளிலங்கை
வருகூரரங்கந்துணித்தார்சரணங்கள்வல்வினைகட்
கிருகூரரங்கள்கண்டீருயிர்காள்சென்றிரவுமினே. (௭௧)

இரணியநாட்டனிரணியனீரைந்தலையன்கஞ்சன்
முரணியகோட்டினகத்திற்கரத்தின்முன்னாளிற்றுஞ்சத்
தரணியிற்குத்தியிடந்தெய்துதைத்தவன்சற்பவெற்பன்
அரணியகேழலரிராகவன்கண்ணனாமிவந்தே. (௮௦)

வந்தித்திருக்குமறைபோற்றுவேங்கடவாணமலர்
உந்தித்திருக்குங்குமமணிமார்பவுள்வஞ்சனையும்
புந்தித்திருக்கும்வெகுளியுங்காமமும்பொய்யும்விட்டுச்
சிந்தித்திருக்குமதெக்காலம்யானுன்றிருவடியே. (௮௧)

திருவடிவைக்கப்புடவிபற்றாதண்டஞ்சென்னிமுட்டும்
கருவடிவைக்கலந்தாற்றாவெண்டிக்குங்கடன்மண்கொள்வான்
பொருவடிவைக்கனலாழிப்பிரான்புனலாழிகட்டப்
பெருவடிவைக்கண்டவப்பனெவ்வாறடிபேர்ப்பதுவே. (௮௨)

பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை வேங்கடம் பேணுந்
துழாய்த், தாரானைப் போதனைத் தந்தானை யெந்தையைச் சாடி
றப்பாய்ந், ஆரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப் பஞ்சவர்க்
குய்த்துநின்ற, தேரானை நான்மறை தேர்ந்தானைத் தேருநுந்
தீதறுமே. (௮௩)

அறுகூடுகங்கைதரித்தானயனழைத்தாலுமிச்சை
அறுகூடுமாலடியாரடிக்கேயப்பன்வேங்கடவன்
மறுகூடுமாதரொறிபூணெறிக்குமதிலரங்கன்
மறுகூடுநம்மைமருவாமல்வாழ்விப்பன்மாமனமே. (௮௪)

மாமனங்காந்தவல்வாய்ப்புள்ளையேவமடித்துப்பித்தன்
நாமனங்காந்தவன்றேருடவெய்தோனறும்பூங்கொடிக்குத்

தாமலங்கார்தன்திருவேங்கடத்தெர்தைதாள்களிலென்
றிமனங்காந்தங்கவருசிபோலென்றுசேர்வதுவே. (அரு)

சேருமறுக்கருநோயுமரணமுந்தீவினையின்
வேருமறுக்கவிரும்பிநிற்பீர்வடவேங்கடத்தே
வாருமறுக்கவறியானெவனாயும்வாழவருள்
சூருமறுக்கமலையணிமார்பன்கைக்கோதண்டனே. (அசு)

கோதண்டத்தானத்தன்வாள்கதைநேமியன்கோலவட
வேதண்டத்தானத்தனின்னிசையான்மண்ணும்விண்ணுமுய்ய
மூதண்டத்தானத்தவதரித்தானெனின்முத்திவினைத்
திதண்டத்தானத்தனுவெடுத்தானெனிற்றீநரகே. (அஎ)

நரகமடங்கலுஞ்சென்றெய்த்தடாவிக்குநாரியர்மேல்
விரகமடங்கமெய்ஞ்ஞானம்வெளிசெயவீடுபெற
உரகமடங்காடித்தபொற்குளின்றென்னுச்சிவைப்பாய்
வரகமடங்கயலானுய்வடமலைமாதவனே. (அஅ)

மாதிரங்காதன்மனைவாழ்க்கையென்றெண்ணிவான்பொருட்கு
மாதிரங்காதம்பலவளைவீரின்னுமைந்தனென்றோர்
மாதிரங்காதபடிவணங்கீரரிமாவொடுகைம்
மாதிரங்காதமர்செய்கின்றசேடமலையனையே. (அகூ)

மலையினரக்கருடன்றெழுந்தானொன்றுமாமறைநூற்
கலையினரக்கருடனிந்திராதியர்காட்டச்செய்யும்
கொலையினரக்கருடனேறும்வேங்கடக்குன்றனொன்றால்
உலையினரக்கருடக்கிலரோனுமென்னுள்ளவர்க்கே. (கூ0)

உள்ளமஞ்சாய்வலியாய்வலியார்க்குமுபாயம்வல்லாய்
கள்ளமஞ்சாயுதங்கைவருமாயினுங்கங்குலினில்
வெள்ளமஞ்சார்பொழில்வேங்கடக்குன்றினில்வீழருவிப்
பள்ளமஞ்சாரல்வழிவரில்வாடுமிப்பாவையுமே. (கூக)

பாவையிரங்குமசோதைக்குமுத்துபதுமச்செல்விக்
கேவையிரண்டன்னகண்மணிநீலமிருசரணப்

பூவையிரந்தவர்க்கின்பவளம்புல்லசுரர்க்கென்றும்
மாவையிரந்திருவேங்கடத்தோங்குமரகதமே. (கஉ)

மரகதத்தைக்கடைந்தொப்பித்ததொத்தனவாழ்த்தினர்தம்
நரகதத்தைத்தள்ளிவைகுந்தநல்கினநப்பின்னையாம்
விரகதத்தைக்குவிடையேழ்தழுவிய வேங்கடவன்
குரகதத்தைப்பிளந்தான்றாள்களாகியகுன்றங்களே. (கஙு)

குன்றுகளத்தனையுங்கடறாரக்குவித்திலங்கை
சென்றுகளத்தனைவோனையுமாய்த்துத்திருச்சரத்தால்
அன்றுகளத்தனையட்டானையப்பனையாய்மகடோள்
துன்றுகளத்தனையேத்தவல்லார்க்கில்லைதுன்பங்களே. (கச)

துன்பங்களையுஞ்சனனங்களையுந்தொலைவறுபேர்
இன்பங்களையுங்கதிகளையுந்தருமெங்களப்பன்
தன்பங்களையும்படிமூவிண்ணைவைத்துத்தாரணியும்
பின்பங்களையுமிழுதுமுண்டானடிப்பேர்பலவே. (கரு)

பலகுவளைக்குட்சிலகஞ்சம்போலும்படிவவப்பன்
நலகுவளைக்குமுன்னுண்டானின்மாட்டுநணுகிலனே
உலகுவளைக்குங்கடலேநின்கண்முத்துகுத்திரங்கி
இலகுவளைக்குலஞ்சிந்தித்துஞ்சாயின்றிராமுற்றுமே. (கசு)

முற்றிலைப்பந்தைக்கழங்கைக்கொண்டோடினைமுன்னும்பின்னு
அற்றிலைதீமையவைபொறுத்தோந்தொல்லையாலினிளய் [ம்
கற்றிலைமேற்றுயில்வேங்கடவாவின்றுன்கான்மலரால்
சிற்றிலைத்தீர்த்ததற்குப்பெருவீட்டினைச்செய்தருளே. (கஎ)

அரும்பாதகன்பொய்யன்காமுகன்கள்வனருள்சிறிதும்
அரும்பாதகன்னெஞ்சனுருச்சினத்தனவாவினின்றும்
திரும்பாதகன்மத்தனனேற்குச்சேடச்சிலம்பமர்ந்த
திரும்பாதகஞ்சந்தரிலதுகாணுன்றிருவருளே. (கஅ)

திருமந்திரமில்லைசங்காழியில்லைதிருமணில்லை
தருமந்திரமொன்றுஞ்செய்தறியீர்செம்பொற்றுளவனை

மருமந்திரங்கப்பிளந்தான்வடமலைவாரஞ்செல்லீர்
கருமந்திரண்டதையெத்தாற்களையக்கருதுதிரோ. (கூகூ)

கருமலையும்மருந்துங்கண்ணுமாவியுங்காப்புமவன்
தருமலையுந்தியபேரின்பவெள்ளமுந்தாய்தந்தையும்
வருமலையுந்திருப்பாலாழியுந்திருவைகுந்தமும்
திருமலையும்முடையானெனக்கீந்ததிருவடியே. (௧00)

மட்டலைதண்டலைசூழ்வடவேங்கடவாணனுக்குத்
தொட்டலையுண்டபிரானுக்கன்பாம்பட்டர்தூயபொற்று
ளட்டலையுண்டமணவாளதாசனுகந்துரைத்த
கட்டலைசேர்திருவந்தாதிநூறுகலித்துறையே. (௧0௧)

முற்றிற்று.

☞ அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.